DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.200/2021**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மணி | கிராமம் : | |
| தந்தை பெயர் : | பெரியசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2025.
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, பிச்சம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் டைலர் வேலை செய்து வருகிறேன். ராமனை எனக்கு 20 வருடங்களாக தெரியும். கடந்த 2012 ம் வருடம் மேல்நிலைபள்ளி கிரவுண்டில் இருந்தேன். ராமன் வீட்டிற்கு போலீசார் சென்றனர். நான் பின்னால் சென்றேன். ராமனை போலீசார் அழைத்து சென்றனர். நானும் காவல் நிலையத்திற்கு சென்றேன். அப்போது காவல் நிலையத்தில் ராமனை போலீசார் விசாரித்தனர். ஆவணங்களை எடுத்து கொடுத்தார். ஆவணங்களை பார்த்துவிட்டு, உங்கள் மேல் சரியாகதான் உள்ளது என சொல்லி அனுப்பிவிட்டனர்.

2. 2013 ம் வருடம் தினமலரில் பழனியாண்டி பேப்பர் விளம்பரம் கொடுத்தார். டீ கடையில் பார்த்துவிட்டு ராமன் மீது பேப்பர் விளம்பரம் வந்துள்ளது, என்ன என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். ராமனை கேட்டேன். ராமன் நிலத்தை பழனியாண்டி பிடித்துவிட்டதாக சொன்னார். ராமன் என்னிடம் அவதூறு பரப்புவதால் எனக்கு மன உளைச்சலாக இருப்பதாக சொன்னார். ராமன் பத்திர மோசடி செய்ததாக பழனியாண்டி புகார் கொடுத்தார். பத்திர ஆபிசில் பார்த்துவிட்டு, அது ஒரிஜினல் பத்திரம் என சொன்னார்கள். பள்ளியில் 1500 மாணவர்கள் படிக்கிறார்கள். ராமன் அவர்களுக்கு ஷூவும், பள்ளி சீருடையும் வாங்கி கொடுத்தார். ராமன் யார் நிலத்தையும் அபகரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. 2012ம் வருடம் ராமனை காவல் நிலையம் அழைத்து சென்றபோது நான் சென்றேன். இந்த வழக்கு 2015ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது ஊருக்கும், ராமன் ஊருக்கும் 2 கி.மீ தூரம். ராமனை போலீசார் அழைத்து சென்றபோது, நான் எதற்கு சென்றேன் என்றால் தெரிந்தவர், நண்பர் என்பதால் சென்றேன். காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் இருந்தார். காவல் உதவி ஆய்வாளர் பெயர் என்ன என்றால் தெரியாது. காவல் உதவி ஆய்வாளர் தான் விசாரித்தார்.

2. ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் ராமன் பெயரில் இருந்தது. என்ன விவரம் இருந்தது என்றால் தெரியாது. ராமன், காவல் ஆய்வாளர் மீதும், மற்ற சில போலீசார் மீதும் வழக்கு தொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் வரும்போது நான் கிரவுண்டில் பேசி கொண்டிருந்தார். யாருடன் பேசி கொண்டிருந்தேன் என்றால் ரமேஷ், கனகராஜ் ஆகியோருடன் பேசி கொண்டிருந்தேன். நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சென்றேன்.

3. நான் பிச்சம்பட்டியில் டைலர் கடை வைத்திருக்கிறேன். நான் தினமும் டீ சாப்பிட கிருஷ்ணராயபுரம் வருவேன். காலை 8.30 மணிக்கு வந்தேன். தேதி, மாதம் தெரியாது. நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றும், இந்த வழக்கு விசாரணை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரருடன் 3, 4 வாய்தாக்கள் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். எனக்கு எந்த வேலையும் கிடையாது என்றும், பொய் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரின் 20 ஆண்டுகால நண்பர் என்பதால், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் நீதிமன்றத்தில் பல வழக்குகளில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எப்போதும் யார் மீதாவது புகார் கொடுத்து கொண்டிருப்பார் என்றும், அதற்கு நான் உடைந்தையாக உள்ளேன் என்றால் சரியல்ல. பள்ளியில் ஷு, மற்றும் சீருடை கொடுத்ததாக சொல்வது எனக்கு தெரியாது என்றும், அவ்வாறு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரின் மகன் கதிர்வேல் மீது அடிதடி வழக்கு இந்நீதிமன்றத்தில்

இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.